அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

GIT | T | I

## முதலாந் தவணை பரீட்சை – தரம் 12 – 2018
## First Term Test - Grade 12- 2018

சுட்டெண் : ........................ பொதுத் தகவல் தொழிநுட்பவியல் I General Information Technology I காலம் : 1 மணி

- **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**
- **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. தகவல் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   a. தவல்களை முறைவழிப்படுத்துவதன் மூலம் அர்த்தமுளள் தரவுகளை உருவாக்கலாம்.
   b. பண்பறி தகவலின் இயல்பொன்றாகும்.
   c. கடையொன்றில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல் தகவலிற்கு உதாரணமாகும்.
   மேலுள்ள கூற்றுக்களுள் சரியானது/சரியானவை?
   i. A மடடும் ii. B மட்டும் iii. A யும் B யும் மட்டும். iv.B யும் C யும் மட்டும்.

2. நிரல் A இற்குப் பொருத்தமானவற்றை நிரல் B ல் இருந்து தெரிந்து எழுதினால் முறையே,

| A | B |
|---|---|
| தலைபன்னி (headphone) | I. வருவிளைவுச் சாதனம் |
| வருடி ( Scanner) | II. உள்ளீட்டுச் சாதனம் |
| வன்வட்டு (HardDisk) | III. தேக்கசாதனம் |

   i. I,II,III ii. II,III,I iii. II,I,III iv. III,I,II

3. கணினியில் தரவு முறைவழியாக்கம் மேற்கொள்வது
   i. முறைவழியாக்கல் அலகு ii. பிரதான நினைவகம்
   iii. உள்ளீட்டுச் சாதனம் iv. வெளியீட்டுச் சாதனம்

4. “மொடம்” ஐ கணினியுடன் தொடர்புபடுத்தும் துறை எது?
   i. சமாந்தரதுறை ii. வலையமைப்புத்துறை iii. கணினித்திறைதுறை iv. தொடர்துறை

5. பண்பறி தகவலின் இயல்பொன்றல்லாதது எது?
   i. திறமை ii. நம்பகத்தன்மை iii. பூரணம் iv. கிரயம் இழிவாதல்

6. அனைத்து துறைகளும் தொடுக்கப்படுவது
   i. வன்வட்டுடன் ii. பிரதான நினைவகத்துடன்
   iii. தாயப்பலகையுடன் iv. மத்திய முறைவழியாக்கல் அலகுடன்

7. எனும் தசம எண்ணுக்கு சமவலுவான இரும எண் எது?
   i. $000100_{இரண்டு}$ ii. $100000_{இரண்டு}$ iii. $100100_{இரண்டு}$ iv. $101011_{இரண்டு}$

8. 2018 எனும் வருடம் பிரதான நினைவகத்தினுள் சேமிக்கப்படும் துவித வடிவம் எது?
   i. $11110011001_{இரண்டு}$ ii. $11110011011_{இரண்டு}$ iii. $11111100010_{இரண்டு}$ iv. $11111111011_{இரண்டு}$

9. 01000010 எனும் துவித எண்ணுக்கு சமவலுவான பதின்ம எண் எது?

i. 72 ii. 96 iii. 66 iv. 86

10. ‘C’ எனும் எழுத்து பதினறும எண்ணில் பிரதிநிதிப்படுத்தப்படுவது,
i. $1011_{\text{இரண்டு}}$ ii. 12 iii. $1101_{\text{இரண்டு}}$ iv. 13

11. $1010010_{\text{இரண்டு}}$,$1101111_{\text{இரண்டு}}$, $1011010_{\text{இரண்டு}}$ எனும் எண்களை இறங்குவரிசையில் எழுதும் போது கிடைக்கும் விடை எது?
i. $1101111_{\text{இரண்டு}}$, $1010010_{\text{இரண்டு}}$ , $1011010_{\text{இரண்டு}}$
ii. $1011010_{\text{இரண்டு}}$ , $1101111_{\text{இரண்டு}}$,$1010010_{\text{இரண்டு}}$
iii. $1010010_{\text{இரண்டு}}$, $1101111_{\text{இரண்டு}}$, $1011010_{\text{இரண்டு}}$
iv. $1101111_{\text{இரண்டு}}$, $1011010_{\text{இரண்டு}}$, $1010010_{\text{இரண்டு}}$

12. ‘1320x’ எனும் எண்ணை உள்ளடக்க முடியுமான எண் முறைமை/முறைமைகள்
i. ஒரு எண்ம எண் ii. எண்ம அல்லது தசம எண்
iii. இரும, எண்ம அல்லது பதின்ம எண் iv. இரும, எண்ம, பதின்ம அல்லது பதினறும எண்

13. குறிப்பிட்ட எண் குறிமுறையில் ‘M’ எழுத்துக்கான இரும எண் பெறுமதி 1001101 எனின் ‘O’ எழுத்துக்கான இரும எண் எது?
i. $1001101_{\text{இரண்டு}}$ ii. $1001011_{\text{இரண்டு}}$ iii. $1111000_{\text{இரண்டு}}$ iv. $1001111_{\text{இரண்டு}}$

14. செல்லுபடியாகும் BCD குறிகளைக் கொண்ட விடை எது?
i. 1101,1010,0111,1000 ii. 1001,1000,0111,0010
iii. 1111,1011,0111,1010 iv. 1101,0000,0101,1010

15. முதன்மை நினைவக்கான உதாரணங்களை மட்டும் கொண்ட விடை எது?
i. தற்போக்குப் பெறுவழி நினைவகம், வாசிப்பு மட்டும் நினைவகம், பளிச்சிட்டு நினைவகம்.
ii. பளிச்சிட்டு நினைவகம், வாசிப்பு மட்டும் நினைவகம், பதியி
iii. தற்போக்குப் பெறுவழி நினைவகம், வாசிப்புமட்டும் நினைவகம், பதியி
iv. காந்த நினைவகம், வாசிப்பு மட்டும் நினைவகம், பதியி

16. கைப்பேசியின் நினைவகம் 8GB ஆகும். 2GB கொள்ளளவுடைய எத்தனை படங்களை அதில் சேமிக்கலாம்.
i. 4096 ii. 4000 iii. 8192 iv. 4

17. வலையமைப்புத் துறையற்ற சாதனம் பின்வருவனவற்றுள் எது?
i. லேசர்அச்சுப் பொறி ii. வழிப்படுத்தி iii. தாய்ப்பலகை iv. வலைக்கமரா

18. ஹெட்போன் ஒன்றை கணினியின் தாய்ப்பலகையுடன் தொடுப்பதில் பயன்டும் உள்ளீட்டு மற்றும் வெளியீட்டுத் துறைகளுக்கான நிறங்களை முறையே கொண்ட விடை எது?
i. சிவப்பு, பச்சை ii. ஊதா, வெள்ளை iii. சிவப்பு, வெள்ளை iv. ஊதா, நீலம்

19. மேசைக்கணினியை குவியத்துடன் தொடுக்க மிகவும் பொருத்தமான வடம் எது?
i. தொலைபேசி வடம் ii. USB வடம் iii. UTP வடம் iv. ஒளியியல் நார் வடம்

20. உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு பணிகளை நிறைவேற்ற முடியுமான ஊடகம் எது?
i. சுட்டி ii. கணினித் திறை iii. இலத்திரணியல் வெண்பலகை iv. வருடி

21. பிரயோக மென்பொருள் எது?
i. வட்டுத் துப்பரவாக்கி ii. வலைமேலோடி iii. BIOS iv. ஹன்தான லினக்ஸ்

22. காந்த, ஒளியியல் மற்றும் திண்ம நிலை தேக்கச் சாதனங்களுக்கு உதாரணங்களை முறையே கொண்ட விடை எது?
i. நெகிழ்வட்டு, இறுவட்டு, நினைவுத்துண்டு ii. நெகிழ்வட்டு, பளிச்சிட்டு நினைவகம், வன் வட்டு
iii. காந்தநாடா, புளு-ரே வட்டு, ஜாஸ் வட்டு iv. இறுவட்டு, காந்தநாடா, நெகிழ்வட்டு

23. கோப்பின் பெயரும் கோப்பின் நீட்சியும் வேறுபிரிப்பதற்குப் பயன்படுவது,
i. அரைக்காற்புள்ளி ii. காற்புள்ளி iii. முற்றுப்புள்ளி iv. இரட்டைப்புள்ளி

24. பணிசெயல் முறைமைக்கான உதாரணமல்லாதது எது?


i. Fedora ii. Mac OS iii. Windows 7 iv. Ubuntu

25. பணிசெயல் முறைமையின் பிரதான பணி,
i. பயனர்களைக் கட்டுப்படுத்தல். ii. பயனர்க்கான ஆவணத் தேவைப்பாடுகளை கையாளுதல்.
iii. பயனர்க்கு இடைமுகத்தை வழங்குதல். iv. பயனரின் தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றல்.

26. கோப்பு மற்றும் கோப்புறை தொடர்பான சரியான விடை எது?
a) கோப்பு பெயரின் ஆரம்பப்பகுதியை மீண்டும் மாற்ற முடியாது.
b) கோப்பு மற்றும் கோப்புறைகளை பிரதியெடுக்கலாம் ஆனால் அழிக்க முடியாது.
C) கோப்பை ஓர் இடத்திலிருந்து மற்றுமொரு இடத்திற்கு மாற்றுதல் அசைத்தல் அல்லது இடமாற்றல் எனப்படும். (move)
d) கோப்பு நீட்சி கோப்பு உருவாக்கப்பயன்பட்ட மென்பொருளை அடையாளப்படுத்தும்.
i. A.B மட்டும் ii. B,C மட்டும் iii. C,D மட்டும் iv. மேலுள்ள எதுவுமன்று





27. கணினியின் செயறபாடுகளுக்கு மிகவும் அவசியமான மென்பொருள் எது?
i. பிரயோக மென்பொருள் ii. பயன்பாட்டு மென்பொருள்.
iii. பணிசெயல் முறைமை iv. சாதன செலுத்தி

- **28, 29 மற்றும் 30 ஆகிய வினாக்களுக்கு தரப்பட்டுள்ள தர்க்கப்படலையைஅடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.**




28. A,B ஆகிய உள்ளீடுகளுக்கு 0 மற்றும் 1 ஆகிய பெறுமதிகளை வழங்கும் போது கிடைக்கும் வருவிளைவு எது?
i. 0 ii. 1 iii. A iv. B

29. வருவிளைவு '1' கிடைப்பதற்காக வழங்கப்பட வேண்டிய உள்ளீடுகள் எவை?
i. A=0, B=0 ii. A=0, B=1 iii. A=1, B=0 iv. A=1, B=1


30. மேலுள்ள தர்க்கப்படலைக்கு சமவலுவான வருவிளைவை வழங்கும் தர்க்கப்படலை எது?
i.  ii.  iii.  iv. 

31. தரப்பட்டுள்ள உண்மை அட்டவணைக்குப் பொருத்தமான தர்க்கபடலை எது?

| A | B | C | Z |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 1 | 0 |
| 0 | 1 | 0 | 0 |
| 0 | 1 | 1 | 0 |
| 1 | 0 | 0 | 0 |
| 1 | 0 | 1 | 0 |
| 1 | 1 | 0 | 0 |
| 1 | 1 | 1 | 1 |

i. OR gate ii. AND gate iii. NOT gate iv. மேலுள்ள எதுவுமன்று

32. கீழுள்ள மின்சுற்றை வகை குறிக்கும் தர்க்கச் சுற்று வகை எது?




i. NOT ii. OR

iii. AND iv. மேலுள்ள யாவும்

33. தர்க்கச் சுற்றுக்கள் தொடர்பான சரியான கூற்றைக் கொண்ட விடை எது?
   i. தர்க்கச் சுற்றுக்கள் எண்ணியல் சுற்றுகளை வகை குறிக்காது.
   ii. தர்க்கச் சுற்றுக்கள் நுண்செயலிகளின் அடிப்படை அலகாகும்.
   iii. தர்க்கச் சுற்றுக்கள் திரிதடயங்களின் அடிப்படை அலகாகும்.
   iv. மேலுள்ள கூற்றுக்கள் யாவும் பிழை.

34. குறிப்பிட்ட ஆங்கில எழுத்துக்களுக்கான குறிமுறையில் ‘p’ எழுத்துக்கான இரும எண் பெறுமதி 1010000 எனின் ‘R’ எழுத்துக்கான இருமஎண் எது?

   i. 1110011 ii. 1010001 iii. 1010011 iv. 1010010

35. 4GB கொள்ளளவு சமவலுவானது,
   i. 4096KB ii. $2^{10}$x$2^{2}$MB. iii. $2^{20}$x$2^{2}$Byte iv. $2^{10}$x$2^{2}$KB

36. பணிசெயல் முறைமையின் பாதுகாப்பு முகாமைக்கான ஒரு உதாரணம் எது?
   i. வட்டு வடிவமைப்புக்கு வசதியளித்தல்.
   ii. பல்வேறு மட்டங்களிலுள்ள பயனர்களுக்கு வசதிகளை அறிமுகப்படுத்தும்.
   iii. கணினி வலையமைப்பை தொடர்புபடுத்த வசதியளிக்கும்.
   iv. எந்தவொரு பயனருக்கும் மென்பொருட்களை நிறுவ வசதியளிக்கும்.

37. கணினியின் செய்நிரல்கள் நிறைவேற்றுவதற்கு கணினியில் அத்தியவசியமானது எது?
   i. பதிப்பு நினைவகம். ii. வன்வட்டு
   iii. தற்போக்குப் பெறுவழி நினைவகம். iv. பளிச்சிட்டு நினைவகம்.

38. வின்டோஸ் பணிசெயல் முறைமைகளில் நிறைவேற்று கோப்புக்களுக்கான கோப்புநீட்சி பின்வருவனவற்றுள் எது?
   i. pdf ii. ntfs iii. exe iv. odt

39. கணினியொன்றை வலையமைப்புடன் தொடுப்பதற்கு பயன்படும் சாதனம் பின்வருவனவற்றுள் எது?
   i. ஆளி ii. வலையமைப்பு இடைமுக அட்டை
   iii. குவியம் iv. வழிப்படுத்தி

40. கீழுள்ள சீர்மை வள இடப்படுத்திக்கான ஆள்களப் பெயர் எது?
   https:/www.edupub.gov.lk/ict/grade10/unit02.pdf
   i. https: ii. www iii. edupub.gov.lk iv. tim.pdf

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
**Provincial Department of Education - NWP**

GIT | T | II

முதலாந் தவணை பரீட்சை – தரம் 12 – 2018
**First Term Test - Grade 12- 2018**

சுட்டெண் : .......................


பொதுத் தகவல் தொழிநுட்பவியல் II
General Information Technology II

காலம் : 2 மணி

**அறிவுறுத்தல்கள்**
- **நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.**

01).

a) முறைமை எனும் பதத்தை வரைவிலக்கணப்படுத்துக.
b) கணினியின் பிரதான பகுதிகள் 3 தருக.
c) கணினித் தொகுதியின் படத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க.




Input devices - உள்ளீட்டுச்சாதனங்கள், Output devices வருவிளைவுச் சாதனங்கள், control unit – கட்டுப்பாட்டு அலகு எனக் கருதுக.

I. A, B, C, D ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
II. ‘A’ யின் பிரதான தொழிலைக் குறிப்பிடுக.
III. உள்ளீட்டு, வருவிளைவுச் சாதனங்களுக்கு உதாரணங்கள் 2 வீதம் தருக.
IV. ‘D’ யிற்கு கணினியினுள் பயன்படுத்தும் சாதனம் ஒன்றைத் தருக.

02). சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளைப் பயன்படுத்தி தயார் செய்யப்பட்ட ஆவணம் (உரு 1) கீழே தரப்பட்டுள்ளது.





Figure 01

சொல் முறைவழிப்படுத்தல் மென்பொருளில் பயன்படும் கருவிகள் 1 தொடக்கம் 20 வரை தரப்பட்டுள்ளன. (உரு 2) அதற்கு பொருத்தமான கருவிகளுக்குரிய இலக்கங்களை எழுதுக.





figure 02

( மேலதி கருவிகளுக்கு புள்ளி வழங்கப்படாது)

a) ‘A’ இனை வடிவமைக்க பயன்படுத்தப்பட்ட கருவிகள் எவை?

b) ‘B’ யினால் காட்டப்பட்டுள்ள உபதலைப்பை தடிப்பக்கி சாய்வாக்கி எழுத்துக்களின் கீழ்க்கோடிட பயன்படும் கருவிகளை தருக.

c) உபதலைப்பு B யின் எழுத்தின் அளவை 12 இலிருந்து 22 ஆக மாற்றியமைக்கப் பயன்படும் கருவிகளைத் தருக.

d) பந்தி B யின் எழுத்தின் வடிவம், நிறம் என்பவற்றை மாற்ற பயன்படும் கருவிகள் எவை?

e) D எனும் பந்தியை வலது நேர்ப்படுத்துவதற்குப் பயன்படும் கருவி எது?
f) 'E' எனும் படவுருவை உள்ளிடப் பயன்படும் கருவிகள் எது?
g) 'F' எனும் பட்டியலை குண்டுப் பட்டியலிடப் பயன்படும் கருவி எது?

03) a) தரப்பட்டுள்ள பட்டியலில் இருந்து பொருத்தமான விடைகளைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக.

**(வட்டு சரிபார்த்தல், முறைமை மென்பொருள், வட்டுத் துணிக்கை நீக்கல், வட்டுத் துப்பரவாக்கல், பணிசெயல் முறைமை, உட்பொதிந்த பணிசெயல் முறைமை, பிரயோக மென்பொருள்)**

I. பயனர்னகளின் தேவைகளை நிறைவேற்ற பயன்படும் மென்பொருள் ..........................................
II. குறிப்பிட்ட சாதனங்களுக்கான பதிக்கப்பட்ட பணிசெயல் முறைமை ..........................................
III. கோப்புத் துண்டங்களைத் தேடி மீளொழுங்குப்படுத்தி வட்டுக்களுக்கு மேலதிக இடைவெளிகளை ஏற்படுத்தல் …………………………………………..
IV. தேவையற்ற கோப்புக்களை இனங்கண்டு நீக்குவதற்கு பயன்படும் கருவி ……………………………
V. பயனருக்கும் கணினிக்கும் இடையில் இடைமுகத்தை ஏற்படுத்துவதுடன் வளங்களை முகாமைத்துவம் செய்வது ………………………………………………… ஆகும்.

b) முறைமை மென்பொருள், கணினியில் வன்பொருட்களுக்கும் மென்பொருட்களுக்கும் இடைமுகத்தை ஏற்படுத்துவதுடன் பிரயோக மென்பொருட்களின் செயற்பாடுகளுக்கு வெளியையும் ஏற்படுத்தும்.
I. பணிசெயல் முறைமையினால் வழங்கப்படும் இருவகையான இடைமுகங்களும் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணங்கள் வீதம் தருக.
II. மேலே தரப்பட்ட இடை முகங்களுக்கிடையிலான வித்தியாசங்களை விபரிக்க.

4) கணினியை ஒரு முறைமையாகக் கொள்ளலாம். அதன் கூறுகளாக மென்பொருட்களையும் வன்பொருட்களையும் கருதலாம்.
a) தனியாள் கணினிகளில் பயன்படுத்தப்டும் இரு உள்ளீட்டுச் சாதனங்களைத் தருக.
b) வன்பிரதிகளை வருவிளைவாக்கும் இரு வருவிளைவுச் சாதனங்களைத் தருக.
c) காகிதங்களில் வரையப்பட்ட படவுருக்களை கணினியில் உள்ளிடுவதற்கு பயன்படும் உள்ளீட்டுச் சாதனங்கள் 2 தருக.
d) வரைபியல் வடிவமைப்பு மென்பொருள் ஒன்றை தருக.
e) ''காந்த நாடாக்களில் தரவுகளை சேமிப்பதிலும் வன்வட்டில் சேமித்தல் மிகவும் வினைத்திறன் மிக்கதாகும்''. தரப்பட்டுள்ள கூற்று உண்மையா பொய்யா எனக் குறிப்பிட்டு, உமது விடைக்கான காரணத்தை தருக.

05) a) கமல் தனது தாயிடம் ரூபாய் 1000 பெற்று புத்தகப்பை ஒன்றையும் நீர் போத்தல் ஒன்றையும் கொள்வனவு செய்தான். புத்தகப்பையின் விலை ரூபாய் 650, நீர்ப்போத்தலின் விலை ரூபாய் $11001000_2$ ஆகும்
I. புத்தகப்பையின் விலையை இரும எண்ணில் தருக.
II. நீர்ப்போத்தலின் விலையை தசம எண்ணில் தருக.
III. பொருட்களை கொள்வனவு செய்ததன் பின்னர் மிகுதியாக கிடைக்கும் தொகையை இரும எண்ணில் கணிக்க.

b) எண்முறைமையில் பயன்படும் இலக்கங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு முறைமையின் அடிப் பெறுமானம் தீர்மானிக்கப்டுகின்றது. மேலுள்ள கூற்றை அடிப்படையாகக் கொண்டு கீழே தரப்பட்டுள்ள அட்டவணையை நிரப்புக.

| **எண்முறைமையின் அடிப் பெறுமதி** | **எண்முறையில் பயன்படும் மிகப் பெரிய எண் அல்லது எழுத்து** |
|---|---|
| 2 | …………………… |
| …………………… | 7 |
| 10 | …………………… |
| 16 | …………………… |


c) கூற்றுக்களை சரி அல்லது பிழை கூறுக.

I. 'n' அடிப்பெறுதியுடைய எண்முறைமையின் உச்ச இலக்கம் (n+1) ஆல் பிரதிநிப்படுத்தப்படும்.
II. இரும, எண்ம, பதின்ம மற்றும் பதினறும ஆகிய நான்கு எண்முறைமையிலும் பொதுவாக இரு இலக்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
III. யுனிகோட் முறைமையினால் தமிழ், பிரன்ஸ் மற்றும் அராபி மொழிகளின் எழுத்துக்களை உடபடுத்தலாம்.
IV. BCD குறியாக்க முறைமையினால் எழுத்துக்கள் பிரதிநிதிப்படுத்தலாம்.
V. எந்தவொரு எண்ம எண்முறைமையும் மூன்று இலக்கங்களால் வகைகுறிக்கலாம்.

d) குறியாக்கல் முறைமைகளில் பயன்படுத்தப்படும் பிட் வலுக்கேற்ப பயன்படும் குறிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்டுகின்றது. அதற்கேற்ப பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க.

| **குறியாக்கல் முறைமை** | **பயன்படும் பிட் களின் எண்ணிக்கை** |
|---|---|
| BCD | |
| ASCII | |
| EBCID | |
| Unicode | |

06) கீழே தரப்பட்டுள்ள தர்க்கச்சுற்றை அடிப்படையாகக் கொண்டு கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க. ( x,y உள்ளீடுகள், z வருவிளைவு எனக்கருதுக.)




I. A,B மற்றும் C ஆகிய தர்க்கப்படலைகளை பெயரிடுக.
II. வருவளைவு Z இற்கான பூலியன் கோவையைத் தருக.
III. சாத்தியமான எல்லா உள்ளீடுகளுக்குமான வருவிளைவை காண்பிக்கும் உண்மை அட்டவணையை வரைக.
IV. மேலே தரப்பட்ட உண்மை அட்டவணையைக் கருதி அதே வருவிளைவை விளைவாகத் தரக்கூடிய சமவலுவான தர்க்கச் சுற்றொன்றை வடிவமைக்க.


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
ඉතිහාසය
2013 - 2022
සංගීතය
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න